**DFCC Pay விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்**

**கீழுள்ள "I Accept" பொத்தானை கிளிக் செய்வதன் மூலம் வாடிக்கையாளர் பின்வருவனவற்றை ஏற்றுக்கொண்டு ஊர்ஜிதம் செய்கின்றார்:**

**இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளும் DFCC Pay வசதியின் விபரங்களும் வாடிக்கையாளருக்கு விளங்கப்படுத்தப்பட்டன. வாடிக்கையாளர் இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளையும் மேற்படி விபரங்களையும் வாசித்து, புரிந்துகொண்டு, இணங்கியுள்ளதோடு அவற்றிற்குக் கட்டுப்பட்டு நடக்கவும் சம்மதிக்கின்றார்.**

**1. வரைவிலக்கணங்கள்**

வேறு விதமாகக் குறித்துரைக்கப்படாவிடின், இந்த ஆவணத்திலும் DFCC Pay உபயோகம் தொடர்பிலும்:

**DFCC Pay app** என்பது app store மற்றும் play store ஊடாகப் பதிவிறக்கம் செய்யக்கூடிய DFCC Pay தொடர்பான மொபைல் பிரயோகத்தைக் குறிக்கும்.

**வாடிக்கையாளர்** என்பது DFCC Pay app ஐ பதிவிறக்கம் செய்து நிறுவுவதன் மூலம் இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு DFCC Pay app இல் கிடைக்கக்கூடிய செயற்பாடுகளைப் பயன்படுத்த முன்வந்துள்ள ஒரு நபரைக் குறிக்கும்.

**வணிகர்** என்பது DFCC வங்கியில் பதிவு செய்துகொண்டு பண்டங்கள் மற்றும்/சேவைகளுக்கான கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்ளும் வியாபார நோக்கத்திற்காக DFCC Pay app இல் கிடைக்கக்கூடிய செயற்பாடுகளைப் பயன்படுத்த முன்வந்துள்ள பண்டங்கள் மற்றும்/அல்லது சேவைகளின் வழங்குநர்களைக் குறிக்கும்.

**QR குறியீடு** என்பது QR வணிகர் ஒருவரை அடையாளம் காணும் நோக்கத்திற்காக வங்கியினால் உருவாக்கப்படும் தனித்துவமான இரு பரிமாணப் பட்டிக் குறியீட்டைக் குறிக்கும்.

**QR கொடுக்கல் வாங்கல்** என்பது QR சேவையைப் பயன்படுத்தி QR குறியீடு மூலம் வணிகருடன் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கலைக் குறிக்கும்.

**Scan to Pay** என்பது வணிகரின் விபரங்களை உள்ளடக்கிய ஒரு குறியீட்டை ''ஸ்கேன்'' செய்து, தேவையான கொடுக்கல் வாங்கல் தொகை ஏதுவுமிருப்பின் அதனை உள்ளீடு செய்து, ஊர்ஜிதம் செய்யும் வாடிக்கையாளரின் செயற்பாட்டைக் குறிக்கும்.

**பயனர் பெயர்** என்பது DFCC Pay app ஐ அணுகும் நோக்கத்திற்காக ஒரு வாடிக்கையாளர் பதிவு செய்திருக்கும் பெயரை/அடையாளச் சான்றுகளை குறிக்கும்.

**PIN** என்பது DFCC Pay app ஐ அணுகுவதற்குப் பயன்படுத்தப்படும் தனிப்பட்ட அடையாள இலக்கத்தைக் குறிக்கும்.

**DFCC வங்கி பி.எல்.சி.** என்பது 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் DFCC வங்கி பி.எல்.சி. என்ற பெயரில் கூட்டிணைக்கப்பட்ட டிவலப்மன்ற் ∴பினான்ஸ் கோப்பரேஷன் ஒப் சிலோனை குறிக்கும்.

**2. DFCC Pay App**

ஏதேனுமொரு அட்டைத் திட்டம் அல்லது கணக்கு அல்லது வேறேதும் கொடுப்பனவு விருப்பத்தேர்வுகள், வழங்குநர்கள், திரட்டிகள் முதலியவற்றிலிருந்து நேரடியாக QR கொடுப்பனவுகளைச் செய்வதற்கு மொபைல் அடிப்படையிலான கொடுப்பனவுத் தீர்வுகள் மூலம் கொடுக்கல் வாங்கல்களைச் செய்ய வாடிக்கையாளருக்கு வசதியளிக்கும் விதத்திலேயே DFCC Pay app வடிவமைக்கப்பட்டுள்ளது.

இலத்திரனியல் தரவு பிடிக்கும் முனையங்களைப் பயன்படுத்தும் பௌதிக அட்டைக் கொடுக்கல் வாங்கல்களைப் போலன்றி, QR கொடுப்பனவுத் தீர்வுக்கு மேலதிக வன்பொருள் எதுவும் தேவையில்லை. நிலையான அல்லது மாறும் QR ஒன்றை உருவாக்கும் மொபைல் தரவு இணைக்கப்பட்ட சாதனம்

ஒன்றினை வணிகர் வைத்திருப்பார்.

DFCC Pay சேவை வங்கியினால் வாடிக்கையாளருக்கு வழங்கப்படுவதையும் வாடிக்கையாளரினால் அச் சேவை பயன்படுத்தப்படுவதையும் இந்த DFCC Pay ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆட்சி செய்யும். QR அடிப்படையிலான கொடுப்பனவுகள் பற்றிய மேலதிக விபரங்களுக்கு, வங்கியின் தொடர்பு நிலையத்துடன் தொடர்புகொள்ளும்படி அல்லது www.dfcc.lk என்ற வங்கியின் வலைத்தளத்தில் பிரவேசிக்கும்படி வாடிக்கையாளர்கள் கேட்கப்படுவார். குறிப்பாக, இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கான ஏதேனும் திருத்தங்கள், அத்தகைய வலைத்தளத்தில் பிரசுரிக்கப்படுவதுடன், இலத்திரனியல் செய்தி ஊடாகவும் வாடிக்கையாளருக்கு அறிவிக்கப்படும்.

**3. DFCC Pay சேவையின் ஆரம்பம்**

இச் சேவையைப் பயன்படுத்துவதற்கு:

a. Play store இல் அல்லது App store இல் இருந்து DFCC Pay app ஐ பதிவிறக்கம் செய்யவும்.

b. பயனர் உறுதிப்படுத்தலுக்கு தே.அ.அ. மற்றும் மொபைல் இலக்கத்தைப் பதியவும். ஒரே தடவை கடவுச்சொல்லை பதியவும்.

c. உறுதிப்படுத்தல் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டதும், பயனர் பெயர் மற்றும் PIN இலக்கத்தைப் பதிவதன் மூலம் சுயவிபரத்தை உருவாக்குங்கள்.

d. சேவையை அணுகும் நோக்கத்திற்காக, தனிப்பட்ட அடையாள இலக்கத்தைப் பயன்படுத்தி DFCC Pay app. முதலில் செயற்படுத்தப்பட வேண்டும்.

e. ஓர் அட்டையை அல்லது கணக்கைச் சேர்த்துக்கொள்வதற்கு அட்டையின் உருவப்படத்தை ''ஸ்கேன்'' செய்யுங்கள் அல்லது அட்டை இலக்கத்தை அல்லது வங்கிக் கணக்கு விபரங்களைப் பதியுங்கள்

கவனிக்கவும்: சுயவிபரத்தை உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட மொபைல் இலக்கமும் அட்டை/கணக்கு தொடர்பாக வங்கியில் பதிவு செய்யப்பட்ட மொபைல் இலக்கமும் வெவ்வேறாக இருந்தால், DFCC app மீதான அட்டை/கணக்கு நடவடிக்கைகள் பற்றிய அறிவிப்புகள் அட்டையில் மற்றும் வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ள மொபைல் இலக்கத்திற்கு மட்டுமே அனுப்பப்படும்.

**4. DFCC Pay app பயன்படுத்துநராக வருவதற்குரிய தகுதிகள்**

a) இலங்கையில் வசிப்பவராகவும் குறைந்தபட்சம் 18 வயதானவராகவும் இருக்க வேண்டும்.

b) இணக்கமான செயற்பாட்டு அமைப்புக் கொண்ட சாதனத்தை வைத்திருக்க வேண்டும்.

c) இலங்கையில் பொருத்தமான மொபைல் இணைப்பை வைத்திருக்க வேண்டும்.

d) இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுச் செயற்படுத்தப்படும் அட்டை மற்றும் வங்கிக் கணக்கை வைத்திருக்க வேண்டும்.

**5. வாடிக்கையாளர் பொறுப்பேற்க வேண்டிய விடயங்கள்**

a) வாடிக்கையாளர் தனது login விபரங்களை இரகசியமாக வைத்திருப்பதற்கும் QR சேவை ஊடான தனது கடன் அட்டை அல்லது வங்கிக் கணக்கு அல்லது வேறேதும் கொடுப்பனவுத் தீர்வின் மோசடியான அல்லது அனுமதியற்ற உபயோகத்தைத் தடுப்பதற்கும் பொறுப்பாளியாவார். QR சேவையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலினதும் விபரங்கள் முற்றிலும் சரியாக இருப்பதை உறுதிப்படுத்துவதும் வாடிக்கையாளரின் பொறுப்பாகும்.

b) ஏதேனும் மொபைல் சாதனம் இழக்கப்படும் பட்சத்தில் மற்றும்/அல்லது வாடிக்கையாளரின் கணக்கின் இரகசியத் தன்மை அல்லது பாதுகாப்பு தவறப்படும் அல்லது தவறப்படக்கூடிய நிலைமைக்கு உள்ளாகும் நிலைமையில், அத்தகைய சந்தர்ப்பங்கள் பற்றி உடனடியாக வங்கியின் கவனத்திற்குக் கொண்டுவருவது வாடிக்கையாளரின் பொறுப்பாகும். குறிப்பாக, வாடிக்கையாளர் உடனடியாக எமது தொடர்பு நிலையத்துடன் தொடர்புகொண்டு அத்தகைய நிகழ்வுகளை அறிவிப்பதுடன், நிலைமையை நிவர்த்தி செய்வதற்காக அல்லது

வேறு வழியில் தீர்த்துவைப்பதற்காக வங்கி வழங்கும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும் வேண்டும்.

c) வங்கியின் சந்தைப்படுத்தல் பிரசுரங்களை இலத்திரனியல் ரீதியாக DFCC Pay அமைப்பில் காட்சிப்படுத்தவும் காலத்திற்குக் காலம் SMS மூலம் ஊக்குவிப்புத் திட்டங்களை மேற்கொள்ளவும் வங்கி உரிமை கொண்டுள்ளது.

d) கொடுக்கல் வாங்கல்களின் உண்மைத் தன்மை குறித்து வேறெந்த ஊர்ஜிதப்படுத்தல்களையும் வங்கி நாடாது. வணிக ஸ்தானங்களில், app store களில், வலைத்தளங்களில், ஏதேனும் இயந்திரங்களில் அல்லது சாதனங்களில் பயனர் ID, PIN இலக்கம்/கடவுச்சொல், OTP, push payments முதலியவற்றினால் உறுதிப்படுத்தப்பட்ட அறிவுறுத்தல்களைச் செயற்படுத்தியதற்காக வங்கியைப் பொறுப்பாளியாக்க முடியாது.

e) DFCC Pay app பரஸ்பரம் செயற்படுத்தக்கூடியது. இந்த app மூலம் கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதற்கு வாடிக்கையாளர் எந்தவொரு உள்நாட்டு அட்டை வழங்குநரின்/வங்கியின்/வேறேதும் அமைப்பின் அட்டைகள் மற்றும் வங்கிக் கணக்குகளைச் சேர்த்துக்கொள்ளலாம். DFCC அட்டைகள் மற்றும் வங்கிக் கணக்குகள் தவிர்ந்த ஏனைய அட்டைகள் மற்றும் வங்கிக் கணக்குகள் தொடர்பான சகல பிரச்சினைகளும் வாடிக்கையாளரினால் அந்தந்த அட்டை வழங்குநருக்கு/வங்கிக்கு/வேறு அமைப்பிற்கு அறிவிக்கப்பட வேண்டும்..

f) கொடுக்கல் வாங்கல்களைச் செயற்படுத்தும் நோக்கத்திற்காக வாடிக்கையாளரின் DFCC Pay சுயவிபரத்துடன் இணைக்கப்பட வேண்டிய அட்டையை, வங்கிக் கணக்கை நியமிக்க வாடிக்கையாளர் இணங்குகின்றார். வாடிக்கையாளரின் DFCC Pay app ஊடாக கொடுக்கல் வாங்கல் செய்யும் நோக்கத்திற்காகக் கணக்கில் பற்று வைக்கப்படும்போது, மேற்படி அட்டை மற்றும்/அல்லது வங்கிக் கணக்கு ஆரம்பிக்கப்படும் நேரத்தில் வாடிக்கையாளருக்கு அவரது வங்கியினால் வழங்கப்பட்ட செயற்பாட்டு அறிவுறுத்தல்கள் மீறப்படலாம். அதற்கான பொறுப்பை வாடிக்கையாளர் ஏற்றுக்கொள்கின்றார்.

g) DFCC Pay கொடுக்கல் வாங்கல்கள் மீது உச்சவரம்புகளை விதிக்கும் உரிமையை வங்கி கொண்டுள்ளது.

**6. வழமைக்கு மாறான நிகழ்வுகள் பற்றி அறிவித்தல்**

பின்வரும் சந்தர்ப்பங்களில் வாடிக்கையாளர் உடனடியாக வங்கிக்கு அறிவிக்க வேண்டும்:

a) வாடிக்கையாளர் பயன்படுத்தும் இலத்திரனியல் உபகரணம் தொலைந்தால், திருடப்பட்டால் அல்லது பழுதாக்கப்பட்டால்.

b) DFCC Pay app ஐ அணுகுவதற்கு வாடிக்கையாளர் பயன்படுத்தும் அட்டை/வங்கிக் கணக்கு, மொபைல் app அல்லது இலத்திரனியல் உபகரணத்தின் அனுமதியற்ற பாவனை இடம்பெற்றால்.

c) வாடிக்கையாளரின் பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல் ஒரு மூன்றாம் தரப்பிற்குத் தெரிந்துவிட்டால்.

**7. அறிவுறுத்தல்கள் மற்றும் ஊர்ஜிதப்படுத்தல்கள்**

வாடிக்கையாளரினால் வங்கிக்கு அனுப்பப்படும் அறிவுறுத்தல்கள், குறித்துரைக்கப்பட்ட முறையில் வங்கியின் அதிகாரபூர்வ அலுவலகம் ஒன்றிற்குக் கிடைப்பதுடன் வாடிக்கையாளரின் வேண்டுகோளைச் செயற்படுத்த வங்கிக்கு நியாயமான காலமும் இருக்கும் பட்சத்திலேயே, அத்தகைய அறிவுறுத்தல்கள் வங்கியினால் பெறப்பட்டதாகக் கருதப்படும்.

DFCC Pay கணக்கின் செயற்பாடுகளைத் தடைசெய்தல், திருத்தியமைத்தல், மாற்றியமைத்தல் அல்லது மீள ஆரம்பித்தல் தொடர்பான அறிவுறுத்தல்கள் வங்கியினால் உறுதிப்படுத்தப்பட்ட பின்பே செயற்படுத்தப்படும்.

**8. சர்ச்சை தீர்வு நடைமுறை**

DFCC Pay சேவை தொடர்பாக ஏதேனும் சர்ச்சை எழுமாயின், வாடிக்கையாளர் தனக்கு அட்டை வழங்கிய வங்கிக்கு அல்லது தனது கணக்கு பேணப்படும் வங்கிக்கு/நிதி நிறுவனத்திற்கு/வேறேதும் அமைப்பிற்கு அது பற்றி அறிவிக்க வேண்டும்.

DFCC அட்டை வைத்திருப்பவர்கள் மற்றும் வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்களைப் பொறுத்தவரையில், வங்கியானது அத்தகைய சர்ச்சையில் கவனம் செலுத்தும் என்பதுடன், அந்தந்தக் கொடுப்பனவுத்

திட்டம்/அட்டை வைத்திருப்பவர் ஒப்பந்தம் தொடர்பான சட்டங்களுக்கு அமைவாக சர்ச்சைக்குத் தீர்வுகாண முயற்சி செய்யும்.

QR சேவையின் பாவனை மூலம் வணிகரினால் வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட பண்டங்கள் அல்லது சேவைகளின் ஏதேனும் குறைபாடு அல்லது பற்றாக்குறைக்கு வங்கி பொறுப்பாளியாகாது.

QR சேவை கிடைப்பதால் அல்லது கிடைக்காததால், QR கொடுக்கல் வாங்கல் ஒன்றைச் செய்வதில் ஏதேனும் தாமதம் அல்லது தவறுகை இடம்பெறுவதால் ஏற்படக்கூடிய ஏதேனும் பொறுப்பு, இழப்பு, சேதம், கிரயம் மற்றும்/அல்லது செலவுகளுக்கு அல்லது QR சேவையைப் பயன்படுத்துவதன் விளைவாக உங்களுக்கு ஏற்படக்கூடிய இழப்பு, காயம் அல்லது அசௌகரியத்திற்கு வங்கி பொறுப்பாளியாகாது.

**9. முடிவுறுத்தல்**

a) வாடிக்கையாளர் ஏதேனும் காரணத்திற்காக DFCC Pay கணக்கின் பாவனையை முடிவுறுத்த விரும்பினால், அவர் அது பற்றி எழுத்தில் வங்கிக்கு அறிவிக்க வேண்டும். அத்தகைய முடிவுறுத்தலுக்கு முன்னர், அவர் வங்கிக்குச் செலுத்த வேண்டியிருந்த கட்டணங்கள் அல்லது விதிப்பனவுகள் அல்லது கொடுக்கல் வாங்கல் தொகைகளைச் செலுத்த வேண்டும்.

b) வங்கியானது நியாயமான காரணம் எதையும் முன்பு அறிவிக்காமலே தனது தற்றுணிபின் பேரில் வாடிக்கையாளரின் சுயவிபரம், அட்டை மற்றும் வங்கிக் கணக்கை முடிவுறுத்த, இடைநிறுத்த அல்லது அவற்றின் மீது வரையறைகளை விதிக்க உரிமை கொண்டுள்ளது.

0112 350000 என்ற எமது 24x7 தொடர்புநிலைய ஹொட்லைன் மூலம் அல்லது info@dfccbank.com என்ற மின்னஞ்சல் ஊடாக நீங்கள் எம்முடன் தொடர்புகொள்ளலாம்.

**நான் இந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை வாசித்துப் புரிந்துகொண்டதுடன், எப்போதும் அவற்றை அனுசரித்து நடக்கவும் இணங்குகின்றேன்.**

**ஏற்றுக்கொள்கின்றேன் / நிராகரிக்கின்றேன்**